* Sri T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, what I wanted to raise in my amendment which was unfortunately ruled out of order by the Chair was this issue. The Collector of Malabar has been authorized under the original Act to give permits for felling trees. Permits are given for felling trees and after the forests are cleared, only the barren land remains. What is the purpose in giving this permit and at the same time imposing restrictions on the felling of trees? The purpose of the Act is to preserve forests. But the Collector is empowered under the same Act to give permits for felling forest trees. Now when trees are removed from forests and only vacant land remains, is it not the right of the landholder to give it on lease or sell it to a third party? I think his right should not be restricted. I hope the Government will look into the matter."

* The Hon. Sri M. A. MANICKAVELU NAICKER :—" The suggestion will be borne in mind and will be looked into at the appropriate time."

Mr. SPEAKER :—" The question is—

'That the Madras Preservation of Private Forests (Third Amendment) Bill, 1954, be passed into law."

The motion was put and carried and the Bill was passed into law.

(2) THE MADRAS GENERAL SALES TAX (THIRD AMENDMENT) BILL, 1954.

* The Hon. Sri M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I beg to introduce the Madras General Sales Tax (Third Amendment) Bill,[a] 1954, and move—

'*That the Bill be taken into consideration at once.*'

" Sir, the House is aware that under the Madras General Sales Tax (Amendment) Act, 1954, the sales tax on certain kinds of cloth has been increased. According to that Act, cloth which is completely made out of cotton is exempted from this additional sales tax. But if it is made out of an admixture of silk or artificial silk or wool, it is not exempted. So, the exemption is only with respect to the cloth made entirely out of cotton. There has been some difficulty about the interpretation and in order to make it clear, I have brought forward this Bill. That is the object of this Bill."

Mr. SPEAKER :—" Motion moved—

'The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1954, be taken into consideration at once.' "

1-17 p.m. * Sri K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரித் திருத்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

[a] Published in the *Fort St. George Gazette* extraordinary, dated 29th November 1954.

13th December 1954] [Sri K. T. Raju]

" முன்பு நடுத்தர ரகத்துணிகளுக்கு அதாவது 17-ம் நம்பரிலிருந்து 35-ம் நெம்பர் வரையிலுள்ள மில் துணிகளுக்கு ரூபாய்க்கு $1\frac{1}{4}$ அணு வீதம் விற்பனை வரி போட்ட காலத்தில் நாங்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். இந்த மாதிரியாக துணிகளெல்லாம் சாதாரணமாக நடுத்தர மக்களால்தான் வாங்கப்படுகிறது. ஆதலால் இந்த மசோதா கொண்டுவரும்போதே இது தவறு என்று இந்த சபையில் எதிர்த்திருக்கிறோம். ஆனால் அப்பொழுது சர்க்கார் இந்த வரியைப் போடுவதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்றால் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். இந்த கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காகத்தான் இந்த வரியைக் கொண்டுவருகிறோம்; வருமானத்தைக் கருதி இதைக் கொண்டுவரவில்லை என்று சொன்னார்கள். உண்மையாகப் பார்க்கப் போனால் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு பேருதவி அளித்ததாகத் தெரியவில்லை. உண்மையில் அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமானால் நூல் விலையைக் குறைக்கவேண்டும். அதாவது 20-ம் நம்பரிலிருந்து 26-ம் நம்பர் வரையிலும் ஒரு கட்டுக்கு இரண்டு மூன்று ரூபாய் விலை ஏறி இருக்கிறது. இதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு சரியான கூலி கிடைப்பதில்லை. ஆதலால் 17-ம் நெம்பரிலிருந்து 35-ம் நெம்பர் வரையிலுள்ள நூலின் விலையை 2 அல்லது 3 ரூபாய் வரை குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை ஏதாவது சர்க்கார் எடுத்துக்கொண்டால் உண்மையிலேயே இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்தவர்கள் ஆவோம்.

" தவிர நாட்டில் உற்பத்தியான துணிகள் மக்களால் வாங்க முடியாமல் தேங்கிக் கிடக்கிற காரணம் என்னவென்றால் மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து இருக்கிறது. அதனால் அந்தத் துணிகளை வாங்குவதற்கு அவர்களிடம் பணம் இல்லை. ஆதலால் இந்தத் திருத்த மசோதாவைக்கொண்டு வந்து ஏற்கனவே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற மக்களை மேலும் மேலும் கஷ்டத்திற்குள்ளாக்கவேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, இது அவசியமற்றது என்று கருதுவதனால் இதை நான் எதிர்ப்பதோடல்லாமல் மற்ற அங்கத்தினர்களும் எதிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI R. KRISHNAN :—" മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഞാൻ ഈ ഭേദഗതി 1–20 p.m.
ബില്ലിനെ എതിർക്കുന്നു. കഴിഞ്ഞ പ്രാവശ്യവും ഞങ്ങൾ ഈ ബില്ലിനെ എതിർക്കുകയാണ് ചെയ്തത്. ഈ നികുതിയിൽനിന്നു കിട്ടുന്ന ആദായം, അതായത്, ഉറുപ്പികയ്ക്കു ഒന്നേകാലണ എന്ന ക്രമത്തിന്നു ഈടാക്കുന്ന തുക കൈത്തറി നെയ്ത്തുകാരെ സഹായിക്കാനുപയോഗിക്കുമെന്നും പറഞ്ഞാണ് ഈ ബില്ല് ആദ്യമേ കൊണ്ടുവന്നത്. കൈത്തറിക്കാരുടെ ഇന്നത്തെ നിലയെന്താണ്? അന്നു തൊഴിലില്ലാതിരുന്ന കൈത്തറിക്കാർക്കു ഇന്നും തൊഴിൽ കിട്ടിയിട്ടില്ല. നൂലിന്നു വില കുറയാത്തിടത്തോളം കാലം കൈത്തറി തുണിത്തരങ്ങൾക്കു ആഭ്യന്തര കമ്പോളത്തിൽ വില്പന ഉണ്ടാവുകയില്ല. തന്നിമിത്തം കൈത്തറിക്കാർക്കും കുഴിത്തറിക്കാർക്കും ഇതുകൊണ്ടു യാതൊരു നന്മയുമുണ്ടാകാൻ പോകുന്നില്ല. ഈ നികുതി വരുന്നതിന്നുമുമ്പു കൈത്തറിക്കാർക്കുണ്ടായിരുന്ന കഷ്ടപ്പാടുകളെല്ലാം ഇന്നും അതേപടി നിലവിലുണ്ട് ഈ നികുതിയുടെ ഫലമായി അവർക്കു എന്തെങ്കിലും രക്ഷ കിട്ടിയിട്ടുണ്ടെന്നു പറയാൻ സാദ്ധ്യമല്ല. നൂലിന്നു വില കുറയ്ക്കാനുള്ള ഒരു പദ്ധതി കൊണ്ടെ കൈത്തറിക്കാർക്കു എന്തെങ്കിലും രക്ഷയുണ്ടാവുകയുള്ളു. ഈ നികുതിക്കു പകരം നൂൽവില കുറയ്ക്കാനുള്ള ഒരു പദ്ധതി ഗവർമ്മേണ്ടു കൊണ്ടുവരികയാണെങ്കിൽ ഞങ്ങൾ അതിനെ സ്വാഗതംചെയ്യുന്നതാണ്. ഈ ബില്ല് ആവശ്യമില്ലെന്നാണ് ഞങ്ങളുടെ അഭിപ്രായം. അതുകൊണ്ടു ഞാൻ ഇതിനെ എതിർക്കുന്നു."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Mr. Speaker, Sir, it is too late in the day to go against the stand that was taken by the House as embodied in the General Sales Tax Act . . ."

[13th December 1954

* SRI M. KALYANASUNDRAM :—" I also wish to speak on this Bill. I was listening to the hon. Member Sri K. Vinayakam and was not attentive when the Hon. Speaker called the Hon. the Minister for Revenue to reply to the debate."

MR. SPEAKER :—" If the hon. Member had stood before I called the Hon. Minister to reply to the debate, I would have very gladly allowed him to speak. It will be a very bad precedent to allow an hon. Member to speak after having called the Hon. Minister to reply to the debate."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" When this House passed the legislation increasing the rate of sales tax on certain articles of cloth, it was made clear that cloth made of cotton of particular counts would be exempt from the extra taxation. It was also made clear that cloth made of silk, wool, flax, or any other material not being cotton would not be exempt from taxation. In the working of this legislation certain difficulties have arisen, with regard to exemption from taxation of cloth, 80 or 90 per cent of which is either silk or artificial silk and only 5 or 10 per cent is cotton. In order to clarify the intention of the Government that only cloth made wholly of cotton would be exempt from taxation, this Bill has been brought before the House."

* SRI S. RAMALINGAM :—" Sir, on a point of clarification, I wish to know whether cloth 80 or 90 per cent of which is cotton and 5 or 10 per cent is either silk or artificial silk will be exempt from taxation."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Exemption will apply only to cloth made wholly of cotton, and cloth made in any other combination or proportion will not be exempt from taxation."

*SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே சாதாரணமாக ஒரு ஏழை ஒரு நல்ல கலர் உடையை உடுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவன் சாதாரணமாக பாதி பருத்தியும் மற்றொரு பாதி சில்க்கும் உள்ள கைத்தறி உடையைத்தான் தான் வாங்கிக்கொள்ள விரும்புவான். அப்படிப்பட்ட மட்ட ரகம் உள்ள உடையை உபயோகப் படுத்த வேண்டுமென்றால் சாதாரணமாக அதை அவன் ரூ. 10 அல்லது 15-க்கு வாங்குவான். அவ்விதம் குறைவான விலைக்கு வாங்கி தன்னுடைய ஆசையை நிவர்த்தி செய்துகொள்ள வகை இருக்கும்போது அவனுக்கு வரி போடாமல் இருப்பது நல்லது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அவ்விதமே அந்த மாதிரியான ரகமுள்ள உடைகளுக்கு வரி போடாமல் அரசாங்கம் இருக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு அவைகளுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" I sympathise with the hon. Member for his attraction to the glittering sort of sarees. But I cannot help him. I am only clarifying the principle which has already been accepted."

* SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பாக 17-ம் நம்பர் முதல் 35-ம் நம்பர் வரையிலுள்ள மில் ஜவுளிகளுக்கு ரூபாய் ஒன்றுக்கு 1¼ அணா வரி விதிக்க வேண்டு

13th December 1954] [Sri M. Kalyanasundram]

மென்று இந்த சட்டசபையில் மெஜாரிட்டி வோட்டுகளால் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டு அதுவும் ஜனாதிபதியின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த மசோதாவினுடைய தலையெழுத்து என்னவாயிற்று என்று இன்னும் தெரியவில்லை. அதன் தலையெழுத்து என்னவாயிற்று என்று கேட்கிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" We have neither received the assent of the President nor has it been refused. Evidently the Government of India are taking into account the views expressed by the hon. Members on the other side and are scrutinizing the Bill.

" The hon. Deputy Leader of the Opposition suggests that further consideration of the Bill be taken up to-morrow and the Government are agreeable to taking up the Bill to-morrow. I request the Chair to postpone further consideration of the Bill to to-morrow."

MR. SPEAKER :—" I have no objection. I will now take up the half-hour debate."

HALF-HOUR DEBATE ON THE SALE OF CIVIL SUPPLIES DEPARTMENT LORRIES.

MR. SPEAKER :—" I will give ten minutes to Sri Vinyakam, ten minutes to Sri Kalyanasundram and ten minutes to the Hon. Minister." 1-30 p.m.

SRI K. VINAYAKAM :—" Sir, I will give two out of my ten minutes to Sri Swayamprakasam."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I want two minutes, Sir."

MR. SPEAKER :—" I do not think there will be time enough."

* SRI K. VINAYAKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு சில லாரிகளை தனிப்பட்ட ஒரு நபருக்கு விற்றதைப்பற்றி ஒரு கேள்வி போடப்பட்டது. அந்தக் கேள்விக்குத் தகுந்த படியான பதில் கொடுக்காததால்தான் இந்த அரை மணி நேர விவாதம் கேட்கப்பட்டது. தகுந்த பதில் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த அரை மணி நேர விவாதத்திற்கு இடம் இருந்திருக்காது. இதன் மூலம் நான் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டிய சில விஷயங்களில் ஒன்று மாத்திரம் முக்கியமானது. முதலில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதானது இப்பொழுது காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை நடத்துகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவர்கள் அந்த லாரிகளை ஒரு காங்கிரஸ்காரருக்கு விற்றிருக்கிறார்கள். அவ்விதம் விற்றிருப்பது ஒரு தப்பான காரியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் எங்களுடைய அதாவது காங்கிரஸ் அல்லாத கட்சியைச் சேர்ந்தவர்களுடைய எண்ணம். அரசாங்கம் என்றால் அது எல்லா கட்சிகளுக்கும், எல்லா மக்களுக்கும், நன்மை செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சி அரசாங்கம் நடத்துகிறது என்றால் காங்கிரஸ் கட்சிக்கு மாத்திரம் சலுகை காட்டுவது என்பது இல்லை. இதை முதலில் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது தாவாவில் இருப்பது அரசாங்கத்தினுடைய சொத்து. அப்படிப்பட்ட அரசாங்க சொத்தை அரசாங்கம் மற்றவர்களுக்கு விற்கவேண்டுமென்றால் அந்த முறை வேறு. அதை எப்படி விற்க வேண்டும், யாருக்கு விற்க வேண்டும் என்பதெற்கெல்லாம் ஒரு தனிப்பட்ட முறை இருக்கிறது. அப்படிப்பட்ட சொத்து ஒரு குண்டூசியாக இருந்தாலும் அதை விற்பதற்கு முன்பாக அதை